DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.191/2025

Prosecution witness – PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முத்துக்குமார் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed.)
26. 02.2026 at 04.20 P.M.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கோவிலாங்குளம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 28.06.2025ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் சிக்கல் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த போது எனக்கு கிடைத்த ரகசிய தகவரிலன் பேரில் என்னுடன் வந்த தலைமை பெண் காவலர் 1814 திருமதி.ரோசனா மேரி மற்றும் முதல் நிலை பெண் காவலர் 868 திருமதி.சோலையம்மாள் ஆகியோர் சகிதம் காமராஜபுரம் கிராமத்தில் உள்ள எதிரியின் வீட்டில் அருகில் ரோந்து சென்ற போது அங்கே சந்தேகப்படும் படியாக நின்ற காமராஜபுரத்தை சேர்ந்த முருகேசன் மனைவி சண்முகவள்ளி என்பவரிடம் சோதனை செய்த போது அவரிடம் வெள்ளை நிற சாக்கு பையில் 180 ML அளவுள்ள Meclene Brandy என்ற லேபிளுடன் கூடிய 5 மது கண்ணாடி பாட்டில்கள் இருந்தது. Black Pearl Brandy என்ற லேபிளுடன் கூடிய 2 மது கண்ணாடி பாட்டில்கள் இருந்தது. Mens Club Brandy என்ற லேபிளுடன் கூடிய 1 மது கண்ணாடி பாட்டில்கள் இருந்தது. மொத்தம் 8 மதுபாட்டில்கள் இருந்தது.

3. சம்பவ இடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் தலைமை பெண் காவலர் 1814 திருமதி.ரோசனா மேரி மற்றும் முதல் நிலை பெண் காவலர் 868 திருமதி.சோலையம்மாள் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து 8 மதுபாட்டில்களுன் கைப்பற்றி எதிரியையும் கைது செய்தேன். பின்னர் எதிரி

சொத்துக்கள் சகிதம் நிலையம் வந்து நிலையக்குற்ற எண். 52/2025 பிரிவுகள் 4(1)(C) TNP Amendment Act 2024 ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.

4. எதிரியை நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்தேன். பின்னர் 8 மதுபாட்டில்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ.4 ஆகும். பின்னர் சாட்சிகள் தலைமை பெண் காவலர் 1814 திருமதி.ரோசனா மேரி மற்றும் முதல் நிலை பெண் காவலர் 868 திருமதி.சோலையம்மாள் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்னர் இத்துடன் எனது விசாரணை முடித்து எதிரி சண்முகவள்ளி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024 ன் கீழ் அன்றே குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்தில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள வீடுகளில் உள்ள நபர்களுக்கு எதிரியை கைது செய்து மதுபாட்டில்களை கைப்பற்றிய விவரம் தெரியுமா என்றால் சரிதான். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வெள்ளை நிற சாக்குப்பையை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஒப்படைத்துள்ளேன். சம்பவ இடத்திற்கு வழக்கமான ரோந்து பணியில் சென்றோமா அல்லது தகவல் கிடைத்த பேரில் சென்றோமோ என்றால் வழக்கமான ரோந்து பணியில் சென்றோம். நான் சம்பவ தினத்தன்று சம்பவ இடத்தில் இருந்தது குறித்து காவல் நிலைய பொது நாட்குறிப்பேட்டில் குறிக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். பொது நாட்குறிப்பேட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் மதுபாட்டில்களை ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பினோன என்றால் இல்லை. இந்த வழக்கில் என்னுடன் பணிபுரிந்த காவலர்கள் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன

இடத்தில் வைத்து எதிரியிடமிருந்து மதுபாட்டில்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அத்தாட்சியானது வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. புள்ளிவிவர கணக்கிற்காக மேலகதிகாரியின் உத்தரவின் பேரில் போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/–சாதுசிவசுப்பிரமணியன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி